முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2018 சனவரி

## (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

(Business Law and Ethics)

2018 – 01 - 20
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடம்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரு மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *நீங்கள் ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) ***வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு* ***வினைச் சொல்*** *உள்ளடங்கியிருக்கிறது (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** முதல் **1.7** வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை அவ்வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் குற்றவியல் சட்டம் (Criminal Law) தொடர்பில் சரியானது எது?

(1) இது தனிப்பட்ட நபர்களுக்கிடையிலான ஒரு பிணக்கு ஆகும்.

(2) வழக்குகள் பெரும்பாலும் மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படுகின்றன.

(3) வழக்குகள் நீதவான் நீதிமன்றங்களில் அல்லது உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப் படுகின்றன.

(4) இது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்படுகிறது.

**1.2** இலங்கையிலுள்ள அதியுயர் (highest) நீதிமன்றம்:

(1) உச்ச நீதிமன்றம் (Supreme Court)
(2) மேன்முறையீட்டு நீதிமன்றம் (Court of Appeal)
(3) மாகாண உயர் நீதிமன்றம் (Provincial high Court)
(4) மாவட்ட நீதிமன்றம் (District Court)

**1.3** பின்வருவனவற்றுள் காசோலை ஒன்றில் எழுதப்பட்ட பணத்தொகையைக் கொடுப்பனவு செய்வதற்கு வங்கி மறுக்கக்கூடிய சந்தர்ப்பமாக **அமையாதது** எது?

(1) காசோலை வரைபவரின் (drawer) கையொப்பம் சந்தேகத்திற்கிடமானதாக இருத்தல்.

(2) கணக்கில் போதியளவு பணம் இருத்தல்.

(3) எழுத்திலுள்ள தொகையும் இலக்கத்திலுள்ள தொகையும் வேறுபாடாக இருத்தல்.

(4) காசோலை சேதமடைந்திருத்தல்.

**1.4** பின்வருவனவற்றுள் வங்கி மற்றும் வாடிக்கையாளர் உறவு தொடர்பில் வங்கியின் ஒரு கடமை **அல்லாதது** எது?

(1) வங்கியானது வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

(2) வங்கியானது கிடைக்கத்தக்க தொகைக்கு முழுமையாக எழுதப்பட்ட காசோலைக்கு பணக்கொடுப்பனவை செய்தல்

(3) வங்கிக் கடமைகளை நிறைவேற்றும்போது வங்கியானது நியாயமானளவு கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(4) வங்கியானது வாடிக்கையாளர்களின் நிலையியற் கட்டளைகளைச் செயற்படுத்தக்கூடாது.

**1.5** கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பினது (Incorporation) ஓர் அனுகூலம் (advantage):

(1) சொத்துப் பாதுகாப்பு

(2) வரி சேமிப்பு

(3) இலகுவாக மூலதனத்தை உயர்த்துதல்

(4) மேற்கூறப்பட்ட எல்லாம்.

**1.6** பின்வருவனவற்றுள் கணக்காளர் ஒருவரால் முகங்கொடுக்கப்படுகின்ற ஒழுக்கநெறிப் பிரச்சினை ஒன்றாக **அமையாதது** எது?

(1) முகாமையிடமிருந்தான அழுத்தம்

(2) கண்டுபிடிக்கப்பட்ட மீறுகைகளை அறிக்கையிடல்

(3) தொழினுட்ப ஆற்றல்

(4) ஒழுக்கநெறி உணர்திறன் போதாமை.

**1.7** பின்வருவனவற்றுள் தொழில்சார் ஒழுக்கநெறிகளின் அடிப்படைக் கோட்பாடாக **அமையாதது** எது?

(1) பாரபட்சமின்மை (Objectivity)

(2) சுயாதீனம் (Independence).

(3) பாதுகாப்பு (Protection)

(4) நேர்மை (Integrity)

*இல. **1.8** முதல் **1.10** வரையான வினாக்களுக்கான சுருக்க விடைகளை வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.8** இலங்கையில் ஏற்புடையதான (applicable in Sri Lanka) இரண்டு (02) விசேட சட்டங்களைக் (Special laws) குறிப்பிடுக.

**1.9** பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழுவின் இரண்டு (02) தொழிற்பாடுகளைக் (functions) குறிப்பிடுக.

**1.10** நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் நோக்கம் (objective) ஒன்றினைக் குறிப்பிடுக.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 02

**சிறிபால** என்பவர் “Mazda 1200 model” எனக் குறிப்பிட்டு கார் ஒன்றை விற்பனை செய்வதற்காக விளம்பரம் ஒன்றைச் செய்திருந்தார். **துமிந்த** என்பவர் **சிறிபாலவின்** இடத்திற்குச் சென்று அந்தக் காரினை பரீட்சித்திருந்ததுடன் காரின் பின்புறத்தில் “Mazda 1200 model” எனக் குறிப்பிடப்பட்டிருந்ததையும் அவதானித்தார். அவர் அக்காரினை வாங்கிய பின்னர், அக்காரின் முன்பகுதி வேறொரு மொடல் மோட்டார் காரிலிருந்த பகுதி என்பதும் முன் பகுதியும் பின்பகுதியும் ஒன்றுடனொன்று சேர்த்து ஒட்டப்பட்டுள்ளன என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே **துமிந்த, சிறிபாலவிடம்** வாகனத்தை மீளக் கையளித்து **சிறிபாலவிடமிருந்து** தனது பணத்தை மீளப்பெற விரும்பினார்.

கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்திற்காக **சிறிபாலவிடமிருந்து** பணத்தை மீளப் பெறுவதற்கு **துமிந்தவிற்கு** உரித்துள்ளதா (entitled) என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**பெரேரா** என்பவர் கடன் ஒன்றுக்கான முழுமைத் தீர்ப்பனவாக ரூ. 500,000/- இற்கான குறுக்குக் கோடிட்ட காசோலை ஒன்றை **சுனிலுக்கு** வழங்கியிருந்தார். அக்காசோலையில் 2017 ஏப்ரல் 01 எனத் திகதி இடப்பட்டிருந்தது. **சுனில்** வங்கிக்குச் செல்லும் வழியில், விபத்தொன்றில் சிக்கியிருந்ததுடன் இவ்விபத்து காரணமாக அவர் எட்டு மாதங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் வைத்தியசாலை யிலிருந்து வெளியேறியதன் பின்னர் **பெரேராவிடமிருந்து** பெற்றுக்கொண்ட காசோலையுடன் 2017 டிசெம்பர் 15 ஆந் திகதி வங்கிக்குச் சென்றிருந்தார். **சுனில்** அக்காசோலையைப் பணமாக மாற்ற விரும்பியிருந்தார்.

**பெரேராவிடமிருந்து** பெற்ற காசோலையை பணமாக மாற்றுவதற்கு **சுனிலுக்கு** உரித்துள்ளதா (entitled) என்பதை **விபரிக்குக** (05 புள்ளிகள்)

## வினா 04

**அலைஸ்** என்பவர் அவளுடைய சகோதரியின் ஆயுளுக்கான ஒரு ஆயுள் காப்புறுதியினைப் பெறுவதற்கு விருப்பம் கொண்டுள்ளார். **அலைஸ்** இனால் சில காப்புறுதிக் கம்பனிகளுக்கு விண்ணப்பங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும் அவை ஒன்றும் வெற்றியளிக்கவில்லை. இறுதியாக, **அலைஸ்** இனால் செய்யப்பட்ட விண்ணப்பம் பற்றி **Safe Line காப்புறுதிக் கம்பனி** விசாரித்தது.

**அலைஸ்** இனால் செய்யப்பட்ட **அலைஸ்** இன் சகோதரியினது ஆயுள் காப்புறுதி விண்ணப்பத்தை **Safe Line காப்புறுதிக் கம்பனி** ஏற்றுக்கொள்ளுமா என்பது பற்றி **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 05

கப்பலேற்று வார்நாமம் (Bill of lading) என்பது சர்வதேச வர்த்தகத்தில் மிக முக்கியமான ஆவணமாகும். பொருட்கள் காவிவருபவரிடத்தில் உள்ளபோதும் அதன் உரிமையாளருக்கு அப்பொருட்களை அகற்ற முடியுமாகவிருத்தல் கப்பலேற்று வார்நாமத்தின் ஒரு பிரதான பண்பியல்பாகும்.

காப்பலேற்று வார்நாமத்தின் தொழிற்பாடுகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

**வினா 06**

புலமைச் சொத்தானது (Intellectual property) எந்தவொரு நாட்டினதும் பொருளாதார, சமூக மற்றும் தொழினுட்ப அபிவிருத்திக்கு முக்கியமானதாக இருக்கிறது. இது மனித மூளையினால் மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகளையும் உள்ளடக்குகிறது.

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ், ஏற்பிசைவு செய்யப்பட்ட புலமைச் சொத்தின் இரண்டு (02) வகைகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

**வினா 07**

இலங்கையிலுள்ள ஒரு சுற்றுலா வழிகாட்டியான **அசேன்** தனது அடுத்த சுற்றுலாவை சில வெளிநாட்டினருடன் மேற்கொள்வதற்குத் திட்டமிட்டிருந்தார். சுற்றுலா செல்வதற்காக சௌகரியமான ஒரு காரினைப் பெற அவர் விரும்பியிருந்ததுடன் இதன் பொருட்டு கார் வாடகைக் கம்பனியான **ஆட்டோமொபைல் லங்கா (பிரை.) லிமிட்.** இடமிருந்து ஒரு காரினை பெற கட்டளை (order) செய்திருந்தார். அவர் காரினை ஒதுக்கீடு (reservation) செய்தபோது 05 பிரயாணிகளுக்கான இருக்கை வசதியுடன் சுற்றுலாவுக்குப் பொருத்தமான ஒரு கார் தனக்குத் தேவை என விசேடமாகக் குறிப்பிட்டிருந்தார். எவ்வாறாயினும், சுற்றுலாத் தினத்தன்று, 02 இருக்கைகளைக் கொண்ட பந்தயக் கார் (sports car) ஒன்று அவருக்குக் கிடைத்திருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

இவ்விடயம் தொடர்பில் **அசேனுக்கு** இருக்கின்ற சட்ட உரிமைகளை **ஆராய்க.** (10 புள்ளிகள்)

**வினா 08**

**சுனிமல்** என்பவர் மருதானையில் அமைந்துள்ள ஒரு உணவகமான **சம்ரோ (பிரை.) லிமிட்டெட்** இல் ஒரு சமையலாளராகப் பணிபுரிந்தார். அவர் காலை மற்றும் இரவு வேளைகளில் நெகிழ்ச்சித் தன்மையுள்ள வேலை மணித்தியாலங்களைக் (flexible working hours) கொண்டிருந்ததுடன் அவருக்கு மணித்தியால அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டது. அவர் சமையலறைக்குத் தேவையான உபகரணத்தைச் சொந்தமாக வாங்கியிருந்ததுடன் அதனை அவர் திரும்பவும் தன்னுடனேயே எடுத்துச் செல்வார். அவர் கடந்த 5 வருடங்களாக இவ்வாறே **சம்ரோ (பிரை.) லிமிட்டெட்டில்** பணிபுரிந்திருந்தார். ஒரு நாள் அவர் வேலைக்கு வந்திருந்தபோது, முதலாளி அவரிடம் இதன் பிறகு இங்கு வரவேண்டாம் எனக் கூறியிருந்தார். முதலாளி அவருக்கு எவ்வித அறிவித்தலோ அல்லது இழப்பீடோ வழங்கவில்லை. அவர் நெகிழ்ச்சித்தன்மை நேர அடிப்படையில் பணி புரிந்திருந்ததனால் அவர் எழுத்துமூல ஒப்பந்தம் ஒன்றைக் கொண்டிருக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**சுனிமல்** ஒரு ஊழியரா (employee) அல்லது சுயாதீன ஒப்பந்தகாரரா (an independent contractor) என்பதை **ஆராய்க.** (10 புள்ளிகள்)

## வினா 09

**கமலும் விமலும்** உணவு விநியோகிக்கும் பங்குடமை வியாபாரம் ஒன்றினை ஆரம்பித்தனர். இவ்வியாபார நடவடிக்கைகள் கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அவர்களுக்கிடையில் எவ்வித பங்குடமை உடன்படிக்கையும் காணப்படவில்லை. பங்குடமையை நடத்துவதற்கான விடயங்களைத் தீர்வு செய்வதற்கு 1890 ஆம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச் சட்டத்தை அவர்கள் பின்பற்றியிருந்தனர். வியாபாரம் தொடர்பான பிரதான முடிவுகளை அவர்கள் இருவரும் இணைந்தே எடுத்தனர். அவர்கள் கடந்த ஆண்டின் காலப்பகுதியில் இருபது நிகழ்வுகளுக்கு வெற்றிகரமாக உணவு விநியோகித்திருந்ததுடன் அதன் மூலம் ரூ.10 மில்லியனை நிகர இலாபமாக ஈட்டியிருந்தனர்.

பங்குடமையிலிருந்து தனது இலாபப் பங்காக ரூ.5,000,000/- இனைப் பெற்றுக்கொண்ட **கமல்**, **விமலுடனான** தனது வியாபாரத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற தொடர்புகளைப் பயன்படுத்தி தனது மனைவியுடன் சேர்ந்து **இதேபோன்றதொரு** (similar) வியாபாரத்தை ஆரம்பித்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) ஒரு பங்காளர் என்ற வகையில் **கமலினால்** மீறப்பட்ட கடமைகளை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(b) 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பங்காளர்களின் நான்கு (04) "உரிமைகள் மற்றும் கடமைகளைக்" **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# பகுதி D

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 10

(a) **குமார்** தன்னுடைய பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் சித்தியடைந்தால், தான் ஒரு BMW கார் வாங்கித் தருவதாக **குமாருடைய** தாத்தா **குமாரிடம்** உறுதியளித்தார். குமார் கடுமையாகப் படித்ததுடன் முதல் வகுப்பிலும் சித்தியடைந்தான். **குமார்** தாத்தாவிடம் BMW கார் பற்றிக் கேட்டபோது, அவர் சிரித்ததுடன் 'அது உன்னை ஊக்குவிப்பதற்காக மாத்திரமே சொன்னதாகவும் உனக்காக ஒரு BMW காரை வாங்குவேன் என்று நீ உண்மையிலேயே நினைத்தாயா?' எனக் கேட்டிருந்தார். இதனைத் துரோகமாக உணர்ந்த **குமார்**, BMW கார் ஒன்றைப் பெறுவதற்குத் தனக்குச் சட்ட உரிமை (legal right) காணப்படுவதாகக் கோபத்துடன் கூறினான்.

**குமாரின்** நண்பனான **ரவி**, சில நிதிரீதியான கஷ்டங்களை எதிர்கொண்டிருந்தான். **ரவி** தனது பதின்மூன்றாவது வயதில் ஒரு பணக்காரப் பெண்மணியுடன் உடன்படிக்கை ஒன்றினுள் நுழைந் திருந்தான். அதாவது தன்னுடைய பாடசாலைக் கட்டணங்களை அப்பெண்மணி செலுத்துவாராயின் தான் வேலைக்குச் சென்றதும் தன்னுடைய முதல் வருட சம்பளத்தினை அப்பெண்மணிக்குச் செலுத்த வேண்டும் என்பதே அந்த உடன்படிக்கையாகும். உடன்படிக்கையின்படி, அப்பெண்மணி **ரவியின்** பாடசாலைக் கட்டணங்களைச் செலுத்தியிருந்தார். **ரவி** ஒரு பொறியியலாளராக வளர்ந்திருந்ததுடன் அவன் அந்தப் பெண்மணிக்குக் கொடுத்த வாக்குறுதி பற்றிய சகலதையும் மறந்திருந்தான். அப்பெண்மணி **ரவி** தன்னுடைய முதல் வருடச் சம்பளத்தினைத் தனக்குச்செலுத்த வேண்டுமென உரிமைக்கோரிக்கை (claim) செய்திருந்தார், அல்லது வழக்குத் தொடுத்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(i) ***குமார்*** அவனது தாத்தாவிடமிருந்து BMW கார் ஒன்றினைப் பெறுவதற்கு உரித்துடையவரா என்பதை **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(ii) ***ரவி*** அவரது முதல் வருடச் சம்பளத்தை அப்பெண்மணிக்குச் செலுத்த வேண்டுமா என்பதை **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(b) ***சிறி*** தான் ஒரு வருட காலத்திற்கு நாட்டில் இருக்கமாட்டார் எனக் குறிப்பிட்டு பாலாவுக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அக்காலப்பகுதியில் ***பாலா*** தனது பெருந்தோட்டங்களை கவனித்துக்கொள்ள வேண்டுமெனவும் தவணைப் பணங்களைச் சேகரிப்பதுடன் பெருந்தோட்டத்தைப் பராமரிக்க வேண்டுமெனவும் ***சிறி*** எதிர்பார்த்திருந்தார். அத்துடன் பெருந்தோட்டத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் பெருந்தோட்டத்தின் நிலைமை பற்றி ***பாலா*** கிரமமாக எழுதித் தனக்கு அறிவிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார். பின்னர், ***பாலா சிறியைச்*** சந்தித்து சாவிகளையும் (keys) சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் பெற்றுக்கொண்டார். மேலும், ***பாலா*** எந்தவொரு பொருட்களையும் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு ***சிறி*** வெளிப்படையாகத் தடைவிதித்திருந்தார். தடை இருந்தபோதிலும், ***பாலா*** பெருந்தோட்டச் செயற்பாடுகளுக்காக **பெரேராவிடமிருந்து** கடனுக்குச் சில பொருட்களைக் கொள்வனவு செய்திருந்தார்.

***பாலா*** பெருந்தோட்டத்தை மிக நன்றாகவே கவனித்திருந்ததுடன் அப்பெருந்தோட்டத்தின் ஒரு பகுதியில் ஒரு சிறிய பண்ணையை ஆரம்பித்து, அப்பண்ணையிலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ.100,000/- வீதம் சம்பாதித்திருந்தார். எவ்வாறாயினும், அவர் இது பற்றி ***சிறியிடம்*** எதுவும் கூறியிருக்கவில்லை. பின்னர், ***பாலா*** ஒரு சிறிய பண்ணையை ஆரம்பித்திருக்கிறார் என்பது பற்றிச் ***சிறிக்குத்*** தெரிய வந்ததும், ***சிறி*** அதுபற்றி ***பாலாவிடம்*** வினவியிருந்தார். அதேபோன்று கடனுக்குப் பொருட்களை வாங்குவதற்கு உரிய அதிகாரத்தைத் தான் வழங்காத காரணத்தால் **பெரேராவுக்குச்** செலுத்தவேண்டிய பணத்தொகையைச் செலுத்தக்கூடாது எனச் ***சிறி*** கூறியிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(i) ***பாலா சிறியின்*** முகவர் என்ற ரீதியில் ***சிறிக்கு*** கடமைப்பட்டுள்ள ஏதாவது கடமைகளை ***பாலா*** மீறியுள்ளாரா என்பதை **ஆராய்க.** (05 புள்ளிகள்)

(ii) தனது பணத்தை வசூலிப்பதற்கு **பெரேராவுக்குள்ள** சட்ட உரிமையை **ஆராய்க.** (06 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |